# கலை மற்றும் அறிவியல் புலம்

## திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார் முத்தமிழாயம் &

## தமிழ்த்துறை - இணைந்து நடத்திய

### ஒரு நாள் ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சி - FDP (28.11.2023)

## மொழிபெயர்ப்பியல் - அறிக்கை

| | | |
|---|---|---|
| *நிகழ்வின் தலைப்பு* | : | *மொழிபெயர்ப்பியல்* |
| *நாள்* | : | *28.11.2023 செவ்வாய் கிழமை* |
| *இடம்* | : | *SAS – SMART ROOM* |
| *பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை* | : | *27* |



கலை மற்றும் அறிவியல் புலம்

தமிழ்த்துறை

சுற்றறிக்கை

SAS/CIE/25/FDP/2023-24/01 09. 11. 2023

அன்புடையீர்,

வணக்கம். திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார் முத்தமிழாயமும் தமிழ்த்துறையும் இணைந்து மொழிபெயர்ப்பியல் என்கிற தலைப்பில் ஒருநாள் ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சி (FDP) 28.11.2023 அன்று நடத்த திட்டமிட்டுள்ளோம். இந்நிகழ்வில் கலந்து கொள்ள ஆர்வமுடைய பேராசிரியர்கள், மற்றும் மொழிபெயர்ப்பு துறையில் ஆர்வமுள்ள அனைவரும் இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு அ.முத்துக்குமார் அவர்களிடம் தங்கள் பெயர்களை முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்நிகழ்வில் கலந்து கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(குறிப்பு: பங்கேற்பாளர் கட்டணம் - ரூ.150)

துறைத்தலைவர் இயக்குநர்




திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் மற்றும் தமிழ்த்துறை ஒருங்கிணைப்பில் மொழிபெயர்ப்பியல் - *FDP* நிகழ்வானது *28-11-2023* அன்று நிறுவனத்தின் வேந்தர் மற்றும் இயக்குநர் அவர்களின் நல் ஆசியுடன் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு கலை மற்றும் அறிவியல் புலத்தின் இயக்குநர் முனைவர் *T.H.* நசீமா அவர்கள் தலைமைத் தாங்கி மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம் குறித்தும் பேராசிரியர்கள் அத்துறையில் மிகுந்த ஆர்வமுடன் ஈடுபட வேண்டும் எனவும் எடுத்துரைத்தார். மேலும் தமிழில் நிறைய மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட்டு தமிழுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என அவரின் உரை அமைந்தது.

சிறப்பு விருந்தினரை தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப.ஜெயபாரதி அவர்கள் முறையாக அறிமுகம் செய்து அறிமுக உரை ஆற்றினார். தலைமை விருந்தினர் முனைவர் மு.முத்துவேலு (மேனாள் பதிவாளர்,செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம்) அய்யா அவர்கள்

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இரண்டு அமர்வுகளில் உரையாற்றியும் செயல்முறைப் பயிற்சியும் தந்து சிறப்பித்தார். .

அமர்வு - 1 ‘மொழிபெயர்ப்பு மரபுகள்’ என்னும் தலைப்பில் தொல்காப்பியம் தொடங்கி சமகால வரை மொழிபெயர்ப்பு அணுகுமுறைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது குறித்து பல்வேறு தமிழ் ஆங்கில பாடல்கள், கவிதைகளையும் அவற்றின் மொழிபெயர்ப்புகளையும் குறிப்பிட்டு விரிவான உரையை வழங்கினார்.

அமர்வு – 2. ‘மொழிபெயர்ப்பு சிக்கலும் தீர்வுகளும்’ என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இதில் ஆங்கிலத்தில் இருந்து தமிழாக்கம் செய்வதில் உள்ள சிக்கல்கள் பற்றியும், அச்சிக்கல்களைப் போக்கும் தீர்வுகளைப் பற்றியுமாக பயிற்சி வகுப்பு அமைந்தது. இவ் அமர்வில் பேராசிரியர்கள் பலரும் தமது ஐயங்களை எழுப்பி அவற்றிற்கான தெளிவைப் பெற்றார்கள்.

இந்நிகழ்வில் 27 பேராசிரியர்கள் பல்வேறு கல்லூரிகளிருந்து வருகை புரிந்து கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்து கொண்ட பேராசிரியர்கள் நிகழ்வு குறித்த தங்களின் கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். பின்பு பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வினை முனைவர் க.தமிழ் அவர்கள் தொகுத்து வழங்கினார். தமிழ்த்துறைப் பேராசிரியர் சு.பழனியப்பா நிகழ்வு சிறப்பாக அமைய உறுதுணையாக இருந்தார்.

இந்நிகழ்வின் வரவேற்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பணியினை பேராசிரியர் அ.முத்துக்குமார் அவர்கள் மிகச் சிறப்பாக மேற்கொண்டார்.

முனைவர் சா.திருவாசகம் நன்றியுரையாற்றிய பிறகு, நாட்டுப்பண் இசைக்க நிகழ்வு இனிதாக நிறைவு பெற்றது.







SAS
VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
கலை மற்றும் அறிவியல் புலம்
தமிழ்த்துறை
வருகைப்பதிவு


SAS
VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
கலை மற்றும் அறிவியல் புலம்
தமிழ்த்துறை
வருகைப்பதிவு











### பின்னூட்டம்

*28.11.2023 தேதியன்று தமிழ்த்துறை ஒருங்கிணைத்த* ***மொழிபெயர்ப்பியல் (FDP) -*** *நிகழ்வு எங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாகவும், புதிய சிந்தனையைக்கு விருந்தாகவும், மொழிபெயர்ப்பின் மீது மிகுந்த ஆர்வத்தை தூண்டக்கூடியதாகவும், எங்களின் தனித்திறனை வளர்த்துக் கொள்ள இது நல்வாய்ப்பாகவும் அமைந்தது.*

